TNPSC Tamil Current Affairs 20th April 2017

1). சிறப்பு மிக்க ராஜ் கபூர் வாழ்நாள் சாதனையாளர் விருது யாருக்கு வழங்கப்படவுள்ளது?

A). Vikram Gokhale.

B).Arun Nalawade.

C).Saira Banu.

D).Jackie Shroff.

விடை : C). Saira Banu.

திரைப்படத் துறையின் மூத்த நடிகையான சாய்ரா பானு அவர்களுக்கு மாகாராஷ்ட்ரா மாநில அரசாங்கத்தினால் வழங்கப்படும் சிறப்பு மிக்க விருதான ராஜ் கபூர் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படவுள்ளது. சிறந்த பங்களிப்புக்கான ராஜ் கபூர் விருதினை Jackie Shroff பெறுகிறார். இதைத்தவிர்த்து மராத்தி திரைத் துறை நடிகர்களான Vikram Gokhale விற்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும் Arun Nalawade அவர்களுக்கு சிறந்த பங்களிப்புக்கான விருதும் வழங்கப்படவுள்ளது. இவ்விரு வாழ்நாள் சாதனையாளர் விருதுகளின் மதிப்பு ஒரு சான்றிதல் மற்றும் 5 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை. இதேபோல் சிறந்த பங்களிப்புக்கான வழங்கப்படும் விருதுகளில் ஒரு சான்றிதல் மற்றும் 3 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை இருக்கும். இந்த விருதுகள் மாகாராஷ்ட்ரா மாநிலத்தின் 54 ஆவது மராத்தி திரைப்பட விருது வழங்கும் விழாவில் கொடுக்கப்படும்.

2). தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் முதல் முறையாக எந்த மாநிலத்தில் காட்டுத் தீ ஏற்ப்பட்ட நேரங்களில் மேற்க்கொள்ளப்படும் நடவடிக்கைகளை முன்கூட்டியே பயிற்ச்சி படுத்திக் காட்டியது?

A). மத்தியப் பிரதேசம்.

B).உத்திரகண்ட்.

C).ஜார்க்கண்ட்.

D).ஒடிசா.

விடை : B). உத்திரகண்ட்.

ஏப்ரல் 18,2017 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் முதல் முறையாக உத்திரகண்ட் மாநிலத்தில், காட்டுத் தீ ஏற்ப்பட்ட நேரங்களில் மேற்க்கொள்ளப்படும் நடவடிக்கைகளை முன்கூட்டியே பயிற்ச்சி படுத்திக் காட்டியது. வனத்துறை மற்றும் மாவட்ட ஆட்சி நிர்வாகம் காட்டுத் தீ ஏற்ப்பட்ட நேரங்களில் ஆயத்தமாயிருப்பதற்க்காகவே இம்முயற்ச்சி மேற்க்கொள்ளப்பட்டது. உத்திரகண்ட் மாநிலத்தில் 70% சதவிகித நிலங்கள் காடுகளாகவே இருப்பதால் இந்த 3 நாள் பயிற்ச்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் மாநில அரசு இணைந்தே இப்பயிற்ச்சியினை ஏற்ப்படுத்தியது. இப்பயிற்ச்சியில் மாவட்டங்கள் முழுவதிலும் உள்ள தீயணைப்பு வீரர்கள் மற்றும் மாநிலத்தில் உள்ள மற்ற துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் இதில் பங்கு பெற்றனர்.

3). 2017 ஆம் ஆண்டின் A.T Kearney Foreign Direct Investment (FDI) இன் நம்பிக்கை குறியீட்டில்(Confidence Index) இந்தியா எந்த இடத்தைப் பிடித்துள்ளது?

A). 12 ஆவது.

B).8 ஆவது.

C).10 ஆவது.

D).5 ஆவது.

<u>விடை</u> : B). 8 ஆவது.

2017 ஆம் ஆண்டின் A.T Kearney Foreign Direct Investment (FDI) இன் நம்பிக்கை குறியீட்டில்(Confidence Index) இந்தியா 8 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. A.T Kearney Foreign Direct Investment (FDI) யின் அறிக்கையின் படி, அந்நியநாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்வதற்க்காக இந்தியாவில் உள்ள வெளிப்படையான மற்றும் சிறந்த வணிகச் சூழலையே விரும்புகின்றன. அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்தியாவில் நிகழக்கூடிய பொருளாதர முன்னேற்றங்களில் 31 சதவிகித நிறுவனங்கள் நம்பிக்கை கொண்டுள்ளன மற்றும் 71 சதவிகித நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய முன்வந்துள்ளது. Confidence Index என்பது ஒரு நாட்டின் அரசியல், பொருளாதாரம், மற்றும் நாட்டின் சீர்திருத்தங்கள் போன்றவை அந்நிய

முதலீட்டில் எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதினைக் குறிக்கும் குறியீடாகும். இக்குறியீட்டினை 500 மில்லியன் டாலர் ஆண்டு வருமானம் ஈட்டும் பல தனியுரிமை நிறுவனங்களின் மூத்த நிர்வாகிகளின் முதன்மைத் தகவல்களிலிருந்து வடிவமைக்கப்பட்டது. A.T Kearney Foreign Direct Investment (FDI) இன் Confidence Index இல் அமேரிக்கா முதல் இடத்தினைப் பிடித்துள்ளது. அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த இடங்களை ஜெர்மனி, சீனா, யு.கே., மற்றும் கனடா பிடித்துள்ளது.

4). LIC Housing Finance நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர்(M.D) மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக(C.E.O) யார் நியமிக்கப்பட்டுள்ளார்?

A).Sunita Sharma.

B).Pooja Bansal.

C).Nikhil Kumar.

D).Vinay Sah.

விடை : D). Vinay Sah.

LIC Housing Finance நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர்(M.D) மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக(C.E.O) Vinay Sah நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்க்கு முன்னதாக LIC of India வின் விளம்பரம் மற்றும் தயாரிப்புத் துறையில் நிவாக இயக்குனராக பணியாற்றினார்.

5). பின்வருவனவற்றில் எது (CII - IGBC) யின் பிலேட்டினம் தரவரிசையில் இடம்பெற்ற இந்தியாவின் முதல் திட்டம்?

A).ICICI Bank Data Centre.

B). HDFC Bank Data Centre.

C). Axis Bank Data Centre.

D). SBI Data Centre.

விடை: A). ICICI Bank Data Centre.

ஹைதராபாத்தில் உள்ள ICICI Bank Data Centre திட்டமே IGBC Green Data Centre Rating System த்தில் பிலேட்டினம் தரவரிசையில் இடம்பெற்ற இந்தியாவின் முதல் திட்டமாகும். ICICI வங்கி பசுமை கட்டிடத்

திட்டத்தினை ஆயுத்தப்படுத்திக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட 150 திட்டங்களும் IGBC யினால் தொழில் சான்றழிக்கப்பட்ட திட்டங்களாகும். Indian Green Building Council(IGBC) அமைப்பு Confederation of Indian Industry(CII) கீழ் இயங்கிவருகிறது. இதன் முக்கிய நோக்கம் 2015 ஆம் ஆண்டில் இந்தியாவில் எல்லாவற்றிக்கும் ஏதுவாக ஒரு நிலையான சுற்றுச்சூழல் அமைப்பதாகும். IGBC Green Data Centre Rating System த்தின் மூலம் பல அளவிடக் கூடிய மற்றும் அளவிட முடியாதா பல மறைமுகமான முனேற்றங்கள் அமையும். அளவிடக் கூடியவைகளுல், மின்சார உபயோகம் 20 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாய்க் குறைக்கப்பட்டுள்ளது மற்றும் தண்ணீர் உபயோகிப்பும் 25 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாய்க் குறைக்கப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட காற்றின் தரம், பணியாளர்களுக்கான உடல் நலம் போன்றவை அளவிட முடியாதா பல மறைமுகமான முனேற்றங்களாகும்.

6). வறுமையான மாணவர்களுக்குப் புத்தக வசதியினை அமைத்துக் கொடுக்க எந்த மாநில அரசாங்கம் பள்ளிகளில் புத்தக வங்கியினை அமைக்கவுள்ளது?

A). மத்தியப் பிரதேசம்.

B).ராஜஸ்தான்.

C).பஞ்சாப்.

D).உத்தர் பிரதேசம்.

விடை : C). பஞ்சாப்.

வறுமையான மாணவர்களுக்குப் புத்தக வசதியினை அமைத்துக் கொடுக்க பஞ்சாப் மாநில அரசாங்கம் பள்ளிகளில் புத்தக வங்கியினை அமைக்கவுள்ளது. இதன் மூலம் அந்தக் கல்வியாண்டில் ஏழை மாணவர்கள் கட்டணமில்லாமல் புத்தகங்களை தனக்கு முந்தைய வகுப்புகளில் பயின்ற மாணவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். இதனால் மாணவர்கள் புத்தகத்திற்க்கான செலவுகளை மிச்சப்படுத்திக் கொள்ளலாம் மற்றும் புதிய புத்தகங்களை அச்சிடுவதன்

மூலம் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளையும் குறைத்துக் கொள்ள முடியும். இத்திட்டம் எந்த மாணவர்களுக்கும் கட்டாயமில்லை. அரசின் இத்திட்டத்திற்க்கு அரசுசார நிறுவனங்களும் உதவும்.

7). சமீபத்தில் மறைந்த ஆந்திர மாநில அமைச்சரான " Devineni Rajshekhar" இவர் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்?

A).Indian National Congress(INC).

B).Bharatiya Janata Party(BJP).

C).Communist Party of India(CPI).

D).Telugu Desam Party(TDP).

விடை : D). Telugu Desam Party(TDP).

கிரிஷ்னா மவட்டத்தில் உள்ள கன்கிப்பாடு சட்டமன்றத் தொகுதியிலிருந்து 5 முறை சட்டமன்ற உறுப்பினரான, 63 வயதான திரு. Devineni Rajshekhar அவர்கள் சமீபத்தில் ஹய்தராபாத்தில் காலமானார். இவர் Devini Nehru என்று மக்களால் அழைக்கப்பட்டார். இவர் மறைந்த ஆந்திர முதல்வரான N.T.ராமா ராவீனைப் பின்பற்றுபவர்.

8). இந்திய ரயில்வே துறையின் நிதித்துறை ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A).B N Mohapatra.

B).S K Bhagat.

C).Anand Mathur.

D).Akhil Agarwal.

விடை : A). B N Mohapatra.

1980 ஆம் தொகுதி(Batch) அய் சேர்ந்த Indian Railway Accounts Service(IRAS) இன் அலுவளரான B N Mohapatra, இந்திய ரயில்வே துறையின் நிதித்துறை ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்பு இவர் ரயில்வே நிதிதுறையில் கூடுதல் உறுப்பினராக நவம்பர் 2016 வரை பணியாற்றினார்.

9). "Bhakra Beas Management Board " இன் புதிய தலைவராக யார் நியமிக்கப்பட்டுள்ளார்?

A).Aagam Modi.

B).Devendra Kumar Sharma.

C).Cheteshwar Mangalam.

D).P V Singhal.

விடை : B). Devendra Kumar Sharma.

Himachal Pradesh Power Corporation Limited இன் நிர்வாக இயக்குனரான Devendra Kumar Sharma தற்பொழுது "Bhakra Beas Management Board(BBMB) " இன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். "Bhakra Beas Management Board(BBMB) " பக்ரா, பாங் மற்றும் மற்ற அணைகளில் இருந்து வரும் நீரினை பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களுக்கு வழங்குவதை இதுவே நிர்வாகிக்கிறது. இபதவிக்கான இடம் 2015 செப்டம்பர் மாதம் முதல் காலியாகவே இருந்தது. இதில் எஸ்.கே.ஷர்மா தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டார். இப்பதவிக்கான காலம் 3 ஆண்டுகள் ஆகும்.

10). உலகில் முதன்முறையாக செயர்க்கைக்கோள்களைக் கொண்டு விமானங்களைக் கண்காணிக்கும் முறையை எந்த விமானப் போக்குவரத்து நிறுவனம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது?

A). Japan Airlines.

B). Singapore Airlines.

C).Asian Airlines.

D).Malaysia Airlines.

விடை : D). Malaysia Airlines.

உலகில் முதன்முறையாக செயர்க்கைக்கோள்களைக் கொண்டு விமானங்களைக் கண்காணிக்கும் முறையை Malaysia Airlines நிறுவனம் 2018 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தவுள்ளது. இதற்க்காக Malaysia Airlines நிறுவனம் Aireon LLC, SITAONAIR, FlightAware LLC போன்ற நிறுவனங்களிடம் ஒப்பந்தத்தைக் கையெழுத்திட்டுள்ளது. இதன்மூலம் பனிப்பிரதேசங்கள் மற்றும் மிகவும் மிகவும் தொலைவில் உள்ள இடங்களில் விமானங்கள் செல்லும் போது விமானம் கண்காணிக்கப்படும். இதற்க்காக விமான

வடிவமைப்பில் எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்தக் கூடிய தேவை இல்லை.

---

winmeen